**எஸ்.ஆர்.வி பள்ளிகள்**
**திருச்சிராப்பள்ளி**

வழங்கும்



# அறிஞர் போற்றுதும் 2025

அறிஞர் போற்றுதும்

## தமிழ் விருதுகள் வழங்கும் விழா அழைப்பிதழ்

செப்டம்பர் 13, 2025, சனிக்கிழமை | மாலை 5.00 மணி | சமயபுரம் பள்ளி வளாகம்

# அறிஞர் போற்றுதும்

செப்டம்பர் 13, 2025, சனிக்கிழமை | மாலை 5.00 மணி | சமயபுரம் பள்ளி வளாகம்

**தலைமை ஏற்க**
**திருமிகு A. ராமசாமி**
**தலைவர்**

**வரவேற்று மகிழ**
**திருமிகு P. சுவாமிநாதன்**
**செயலர்**

## "எஸ்.ஆர்.வி"
## வாழ்நாள் சாதனையாளர் தமிழ் விருதுபெறுவோர்



**பேரா.ச.மாடசாமி**
கல்வியாளர்



**திருமிகு.T.ராமசாமி**
அறிவியல் அறிஞர்



**திருமிகு.R.பூர்ணலிங்கம்** இ.ஆ.ப., (ஓய்வு)

## தமிழ் இலக்கிய விருதுபெறுவோர்



**முனைவர்.வறீதையா கான்ஸ்தந்தின்**
கடல் சூழலியல் ஆய்வாளர்



**திருமிகு.பிரளயன்**
நாடகவியலாளர்

## சமூக நோக்கு விருதுபெறுவோர்



**மரு.J.அமலோற்பவநாதன்**



**திருமிகு.நிகார் ஷாஜி**
அறிவியல் அறிஞர்



**திருமிகு.K.மகாலட்சுமி**
ஆசிரியர்

## படைப்பூக்க விருதுபெறுவோர்



**திருமிகு.என்.ஸ்ரீராம்**
எழுத்தாளர்



**கவிஞர்.தி.பரமேசுவரி**



**திருமிகு.நிவேதிதா லூயிஸ்**
எழுத்தாளர்



**திருமிகு.விஜய ராவணன்**
எழுத்தாளர்

## சிறார் இலக்கிய விருதுபெறுபவர்



**திருமிகு.யெஸ்.பாலபாரதி**
எழுத்தாளர்

## சிறப்பு நல்கை விருது




**முசிறி அரசு நூலகம்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **S.செல்வராஜன்**<br>பொருளர் | **M.குமரவேல்**<br>துணைத்தலைவர் | **B.சத்யமூர்த்தி**<br>இணைச்செயலர் | **க.துளசிதாசன்**<br>முதன்மைச் செயல் அலுவலர் | **M.பொற்செல்வி**<br>முதல்வர் | **P.முருகதாசன்**<br>முதல்வர் |

**...ஆசிரியர்கள் மற்றும் மாணவ மாணவிகள்...**

உலகின் பிற பகுதிகளிலும் இந்தியாவின் சில மாநிலங்களிலும் அறிஞர்களைப் போற்றும் பண்பு அவர்தம் அன்றாட வாழ்வின் பகுதியாக இருப்பதுபோலத் தமிழகத்தில் இன்று இல்லை என்ற உணர்வு நம் எல்லோருக்கும் உண்டு. அதிகாரம் சார்ந்ததாகவும் மன விருப்பு வெறுப்பு சார்ந்ததாகவும் கொண்டாட்டங்கள் இங்கு அமைந்து விடுகின்றன.

அறிவு தளத்தில் இலக்கிய தளத்தில் இயங்கும் ஆளுமைகளைக் கொண்டாடுகிற ஒரு குடிமைச் சமூகத்தில்தான் எவருக்கும் அஞ்சாமல் சமூக நலன் சார்ந்து சரியைச் சரியென்றும், தவறைத் தவறென்றும் பேசும் அறிஞர்கள் உருவாகி வருவார்கள். சமூகத்தின் மனசாட்சி எப்பொழுதும் விழிப்புடன் இருப்பது அறிஞர்கள் மூலம்தான். அறிவு பாரம்பரியமாகத் தொடர சமூகத்தில் அத்தகைய சூழல் நிலவுவது அவசியம் என்கிற உணர்விலிருந்து பிறந்ததுதான் இந்த “அறிஞர் போற்றுதும் அறிஞர் போற்றுதும்” நிகழ்வு.

வருங்கால சமூகமான இன்றைய மாணவர் உள்ளங்களில் அறிவுலகத் தேவையை உணர்த்துவதும், எவ்விதமாகக் கொண்டாடுவது என்கிற பயிற்சியை அவர்களுக்கு அளிப்பதும் அவசியம் என்று உணர்கிறோம். தனிமையிலும் குறைந்த ஒளியிலும் மௌனத்திலும் நம் அறிஞர்கள் அமிழ்ந்து போவதையும் போலிகள் கொண்டாடப்படுவதையும் கண்டும் காணாதது போல நாம் கடந்து செல்வது அறிவுலகில் இயங்கும் ஆளுமைகளின் ஆர்வத்தையும் மன உறுதியையும் நீர்க்கச்செய்யும் பண்பாகும். அதில் ஒரு முறிப்பை ஏற்படுத்த வேண்டாமா என்கிற விழைவின் ஒரு வெளிப்பாடாகவே இந்த அறிஞர் போற்றுதும் அறிஞர் போற்றுதும் என்கிற எளிய நிகழ்வு.

**தாமின் புறுவது உலகின் புறக்கண்டு**
**காமுறுவர் கற்றறிந் தார்.** குறள் 399

---

தமக்கு இன்பம் தருகின்ற கல்வியறிவு உலகத்தாருக்கும் இன்பம் தருவதைக் கண்டு, அறிஞர்கள் மேலும் மேலும் பலவற்றைக் கற்றிட விரும்புவார்கள்

